[1971 ஜூலை 22

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப்பிரித்தல்

* 369 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தினை மாயூரம் ஊராட்சி ஒன்றியம் மணல்மேடு ஊராட்சி ஒன்றியம் ஆக இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் ஊராட்சி ஒன்றியம் போதுமான மக்கள் தொகையைக் கொண்டிருப்பதாலும் தேவைப்படுகின்ற வருவாயைக் கொண்டிருப்பதாலும் நிர்வாக வசதிக்காக மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தை மணல்மேடு ஊராட்சி ஒன்றியம் என்றும் மாயூரம் ஊராட்சி ஒன்றியம் என்றும் இரண்டாகப் பிரிப்பதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1958-ஆம் ஆண்டிலே 375 ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப் பட்டன. இந்திய அரசினுடைய ஒப்புதல் இதற்குத் தேவைப் படுகின்றது. இந்திய அரசு பல்வேறு வகைகளின் செலவீட்டு ஒதுக்கங்களுக்காக ஒன்றியங்களின் கணக்குத் தேவைப்படுகிறது. இப்பொழுதுள்ள 375 ஒன்றியங்களிலே கல்வராயன்மலைப் பகுதி யைத்தவிர 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருந்து வருகின்றன. இந்த எண்ணிக்கையைக் கூட்டவேண்டுமானால் இந்திய அரசினு டைய அனுமதி பெறப்பட வேண்டியிருக்கிறது. அதனால்தான் 374-ஆகவே வைக்கப்பட்டிருக்கிறது. அண்மையிலே சிங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் நகராட்சியாக மாற்றப்பட்டு விட்ட காரணத்தி னாலே ஒரு ஒன்றியம் அதிலே குறைந்தது. அதற்குப் பதிலாக கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே இருக்கின்ற பொள்ளாச்சியை—பெரிதாக இருக்கின்றது என்று சொல்லப்பட்டதால்--1966-ம் ஆண்டு பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு என்று இரண்டு ஒன்றி யங்களாகப் பிரித்தார்கள். 374 என்ற அந்த எண்ணிக்கை இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் கூட்டுவதற்கான முயற்சியெடுத் தால் அனுமதி பெற வேண்டும். பெரிய ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டிய ஆலோசனைகளும் இருந்து வருகின்றன. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் இதைப்பற்றிய பிரச்னைகள் விடப்பட்டிருக் கின்றன. அவர்கள் இதை ஆராய்வார்கள், ஆராய்ந்து பரிந்துரை செய்ததற்குப் பிறகு முடிவுகள் செய்யலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றி யங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே பிரிக்கப்பட்டனவையாக இருக்கின்றன. சில ஊராட்சி மன்றங்களில் 10 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சில ஊராட்சி ஒன்றயங்களில் 64 பஞ்சாயத்துக்கள்

1971 ஜூலை 22]

இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் தேர்தல் நடந்தால் ஒரு சில பெருந்தலைவர்கள் 10 பேர்களுடைய ஓட்டுக்களையும் சில பெருந்தலைவர்கள் 64 பேர்களுடைய ஓட்டுக்களையும் எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. அதை இப்பொழுது மாற்றியமைத்து 25-லிருந்து 30 பஞ்சாயத்துக்கள் கொண்ட ஒன்றியங்களாகப் பிரிக்கவேண்டிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு இப்பொழுது பரிசிலனையில் இல்லை. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவிடம் அப்படிப்பட்ட பல செய்திகளும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. பெரியதாக இருக்கின்ற ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டும். சிறியதாக இருக்கின்ற ஒன்றியங்களோடு சிலபல ஊர்களைச் சேர்க்கவேண்டும், என்பன போன்ற கருத்துக்கள் இருந்துவருகின்றன. அவர்கள் இதைப் பற்றிப் பல்வேறு வகைகளிலும் ஆராய்ந்து பரிந்துரை செய்கின்ற நேரத்திலே அதன்மீது தக்க முடிவு எடுக்க நாம் முயற்சி செய்யலாம்.

இராமேஸ்வரம் நகரியம்

* 370 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரூராட்சியாக இருந்த இராமேஸ்வரத்தை அரசு நகரியமாக மாற்றியது உண்மையா ?

(இ) ஆம் எனில், நகரியத்தில் வசதியில்லாமல் உள்ளூர் மக்களும், பயணிகளும் சிரமப்படுவதைத் தடுத்து, நிவாரணம் பெற மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உள்ளாட்சி அமைப்பைக் கொண்டுவர செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இது ஜனநாயக யுகம் ஒவ்வொரு நாட்டையும் மாநிலத்தையும் வளப்படுத்துகின்ற வலிவும் திறமும் ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மன்றங்களுக்கு இருக்கின்றபொழுது—நகரியங்கள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதில்லை என்ற புகார்கள் இருப்பதால்—நகரியங்களை அமைக்கின்ற முறையைக் கைவிட நம்முடைய ஜனநாயக அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 12,500 ஊராட்சி மன்றங்களுக்கும், 95 நகராட்சி மன்றங்களுக்கும் மற்றவைகளும் நடக்கும்பொழுது ஒருசிலவற்றை நகராட்சி மன்றங்களாக நடைபெற விடுவதிலே தவறு இல்லை. அதிகாரத்தை